# ????????? ????????????????????????? ???????? ??????????? ??????????????? ????????????

**Author :** ???????????-1

**Date :** April 23, 2013



**TAMILNADU POWERLOOM FEDERATION LTD.,**

(Also known as Tamilnadu Small Scale Powerloom Industries Protection Federation)

P.B.No. 80, Apex Colony.
Komarapalayam - 638 183
Namakkal Dist. Tamilndau
Ph: 04288 -264755. Fax:04288 - 265706

1st Floor, Lotus Enclave,
Brough Road, Erode.
Tamilnadu, India 638 001
E-Mail : msmathivan@gmail.com

"Cavalier" M.S Mathivanan
PRESIDENT

**தமிழ்நாடு விசைத்தறி சம்மேளனத்தினுடைய மகாசபைகூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.**

தமிழ்நாடு விசைத்தறி சம்மேளனத்தினுடைய மகாசபைக்கூட்டம் 21.04.2013 அன்று மாலை 3.00 மணிக்கு சோமனூரில் உள்ள இலட்சுமி மகாலில் நடைபெறுகிறது. தமிழ்நாடு முழுவதும் சம்மேளனத்தின் உறுப்பினராக உள்ள பெரும்பாலான விசைத்தறி சங்கங்களைச் சார்ந்த விசைத்தறியாளர்களும், நெசவாளர்களும் பெருமளவில் கலந்துகொண்டார்கள். இந்த கூட்டத்தில் அனைவரினுடைய கருத்துக்களும் அறியப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தற்போது விசைத்தறித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் சென்று கொண்டிருக்கிறது. ஐரோப்பிய நிதி நெருக்கடியினாலும் மற்ற நாடுகளின் தொழில் போட்டியின் (Competition) காரணமாகவும் ஏற்றுமதிக்கான ஆர்டர்கள் குறைந்து வருகின்றன. மேலும் நூல் விலை உயர்வு, மின் வெட்டு ஆகிய காரணங்களினால் இத்துறையினுடைய உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்காகவும் விசைத்தறி துறையினுடைய வளர்ச்சி, பாதுகாப்பிற்கு உதவி செய்யுமாறு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு கீழ்க்கண்ட கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**மத்திய அரசுக்கான கோரிக்கைகள்:**

சமீபத்திய நிதிநிலை அறிக்கையில் விசைத்தறிக்கென எந்த திட்டமும் வழங்கப்படவில்லை. ஏற்கனவே நிலுவையில் இருக்கும் தொழில் நுட்ப மேம்பாட்டுத்திட்டம் (TUF) மட்டும்தான் நீடிக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம் பருத்தி நூலுக்கான ஜீரோ சதவீதம் கலால் வரியும் நீடிக்கப்பட்டுள்ளது என்பது பாராட்டக்கூடிய விசயம் ஆகும். இந்த பட்ஜெட்டில் கைத்தறித் துறையை சார்ந்தவர்கள் வாங்கும் கடனுக்கு செலுத்தப்படக்கூடிய வட்டி 6 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. நலிவடைந்த நிலுவையில் இருக்கும் விசைத்தறித் தொழிலைச் சார்ந்தவர்கள் வாங்கிய கடனை செலுத்த முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கும் இந்த வட்டிச் சலுகையை நீடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு விசைத்தறி சம்மேளனத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

அமைப்புச்சாரா நிறுவனங்களின் (Unorganized Sector) தொழிற்சாலைக்கும் தொழிலாளர்களுக்கும் உதவும் வகையில் ஒருங்கிணைந்த சமுதாய பாதுகாப்பு உதவி (Comprehensive Social Security Package) என்ற திட்டம் பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இலட்சக்கணக்கான சிறு மற்றும் குறுந்தொழில்களில் உள்ள விசைத்தறித் தொழிலை அமைப்புச் சாரா நிறுவனம் என அறிவித்து அவர்களுக்கும் இந்தத் திட்டங்கள் மூலமாக பலன்களைக் கொடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறோம்.



TAMILNADU POWERLOOM FEDERATION LTD.,
(Also known as Tamilnadu Small Scale Powerloom Industries Protection Federation)

P.B.No. 80, Apex Colony,
Komarapalayam - 638 183
Namakkal Dist. Tamilndau
Ph: 04288 -264755. Fax:04288 - 265705

1st Floor, Lotus Enclave,
Brough Road, Erode.
Tamilnadu, India 638 001
E-Mail : msmathivan@gmail.com

"Cavalier" M.S Mathivanan
PRESIDENT

தொழில்நுட்ப மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் உபயோகித்த தறிகளை இறக்குமதி செய்யக்கூடாது என மத்திய அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இதுவரை தொழில் நுட்ப மேம்பாட்டுத் திட்டம் ஆரம்பித்த நாள் முதல் இதுநாள் வரை 10 முதல் 15 வருடங்கள் உபயோகித்த தறிகளை இறக்குமதி செய்யலாம் என்று மத்திய அரசு அனுமதி அளித்து வருகிறது. உபயோகப்படுத்தப்பட்ட தறி ஒன்று ரு 5 இலட்சம் முதல் 10 இலட்சத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டு நிறுவப்பட்டு வருகிறது. புதிய தறிகளை வாங்கவேண்டுமென்றால் 30 இலட்சத்திலிருந்து 50 இலட்சம வரை விலை ஆகிறது. இந்த விலைக் கொடுத்து வாங்க முடியாது என்பது மட்டுமல்ல அதிக விலை கொடுத்து வாங்கும் தறியில் நெய்யப்படும் துணிகளின் விலை மிகவும் அதிகமாகும் வெளிநாட்டுச் சந்தைகளுடன் போட்டிப் போட்டுக் கொண்டு விற்க முடியாது. இந்த சூழ்நிலை இருப்பதினால் உபயோகித்த தறிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்ததை நீக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட மனுவில் வெளிநாட்டிலிருந்து துணிகளை மிகக்குறைந்த சுங்கவரி செலுத்தி இறக்குமதி செய்ய அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. அதை அனுமதிப்பதற்கு அரசுத் துறைகளில் விவாதங்கள் நடைபெற்று வருகிறது. நெய்யப்பட்ட, பதப்படுத்தப்பட்ட துணிகளை தாராள இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தால் இந்திய நெசவுத்தொழில் மிகவும் பாதிக்கப்படும். நெசவுத்தொழில் மட்டுமல்ல அதனைச் சார்ந்த ஜின்னிங், ஸ்பின்னிங், சைசிங், வார்ப்பிங், நூல் மற்றும் துணி பதப்படுத்துதல் ஆகிய அனைத்து தொழில்களும் பெரிதும் பாதிக்கப்படும். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நம்நாட்டில் வேலைவாய்ப்பை இழப்பார்கள். ஏற்கனவே மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் மூடிக்கொண்டிருக்கும் ஜவுளித்தொழில் மேலும் பாதிப்பு ஏற்படும். அதனால் மத்திய அரசு வெளிநாட்டிலிருந்து துணிகளை தாராளமாக குறைந்த சுங்கவரியில் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்.

**<u>பருத்தி விலை ஏற்றம்:</u>**

தற்போது பருத்தி நூல் விலை கடுமையாக ஏறிவருகிறது. இந்த வாரத்தில் மட்டும் பருத்தியினுடைய விலை ஒரு கண்டிக்கு ருபாய் 4 ஆயிரம் ஏறி உள்ளது. இதனால் நூல் விலையும் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் கடுமையாக ஏறிவருகிறது. இதில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் நெசவாளர்கள்தான். சந்தை விலையில் பஞ்சை வாங்கி அதிகவிலையில் நூற்பாலையினர் விற்றுவிடுகிறார்கள். அதனால் அந்த நூலை ஏற்கனவே ஒத்துக் கொண்ட ஆர்டர்களுக்குக்கூட அதிகவிலைக் கொடுத்துத்தான் வாங்கவேண்டிய கட்டாயம் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு பஞ்சு ஏற்றுமதியை தாராளமாக்கிவிட்டது.



**TAMILNADU POWERLOOM FEDERATION LTD.,**

(Also known as Tamilnadu Small Scale Powerloom Industries Protection Federation)

P.B.No. 80, Apex Colony.
Komarapalayam - 638 183
Namakkal Dist. Tamilndau
Ph: 04288 -264755. Fax:04288 - 265706

1st Floor, Lotus Enclave,
Brough Road, Erode.
Tamilnadu, India 638 001
E-Mail : msmathivan@gmail.com

"Cavalier" M.S Mathivanan
PRESIDENT

**பஞ்சு ஏற்றுமதி:-**

நல்ல தரமான பஞ்சுகள் அதிகளவில் தற்போது ஏற்றுமதி ஆகிறது. நமது நாட்டிற்குத் தேவையான தரமான பருத்தி கிடைப்பது இல்லை. எனவே, உடனடியாக பருத்தி ஏற்றுமதியை தடை செய்யுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

பருத்தி விலை உயர்வினால் தமிழ்நாடுதான் அதிகமாக பாதிக்கப்படுகிறது. இதனால் பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய மத்திய அரசை வலியுறுத்துமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**யூக வாணிகம்:**

அதேசமயம் யூகவாணிகத்திலும் பருத்தி பெருமளவில் வாங்கப்படுகிறது. இதனால் கச்சாப்பருத்தியினுடைய விலை ஏறிவருகிறது. எனவே யூகவாணிகத்தில் செய்யும் பருத்தி வியாபாரத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**தமிழ் நாடு அரசுக்குக் கோரிக்கை:**

விசைத்தறித் தொழிலை அங்கிகரித்து சில திட்டங்களைக் கொடுத்தமைக்கு தமிழக அரசைப் பாராட்டுகிறோம்.

தற்போது விசைத்தறித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தினசரி கூலிக்குத்தான் விசைத்தறி நெசவாளர்கள் வேலை செய்கிறார்கள். தறி ஓடாவிட்டால் அவர்களுக்குக் கூலி இல்லை. மற்ற தொழிலாளர்கள் மாதாந்திர சம்பளத்தில் வேலை செய்கிறார்கள். ஆனால் அதிக பாதிப்பு அந்த தொழிலாளருக்கு ஏற்படுவது இல்லை. எனவே, விசைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சிறு விசைத்தறித் தொழிலுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குமாறு தமிழக அரசை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

விசைத்தறிக்கென தனி இயக்குநரகம் அமைத்தல். தற்போது கைத்தறி இயக்குநரகத்தின் கீழ்தான் விசைத்தறித் தொழில் இயங்கி வருகிறது. தமிழ் நாட்டு விசைத்தறித் தொழில்தான் வேலைவாய்ப்பு கொடுப்பதிலும் சரி, தொழில் உற்பத்தியிலும் சரி, ஏற்றுமதி செய்வதிலும் சரி முதலாவதாக இருக்கிறது. இந்த தொழில் மேலும் திறம்பட நடத்துவதற்கு பல திட்டங்கள் தேவைபடுகிறது. தொழிலாளர்களுக்கு பயிற்சித் திட்டம், கம்யூட்டர் டிசைனிங் சென்டர், நூல் விநியோக மையங்கள் மற்றும் விசைத்தறி சேவை மையங்கள் இதுபோன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாக விசைத்தறி துறையினுடைய உற்பத்தியும், உற்பத்தித் திறனும் அதிகரித்து தொழிலாளர்கள் அதிக வேலைவாய்ப்பு பெற்று அதிக ஏற்றுமதியும் செய்து தமிழக ஜவுளித் தொழில் மிகச் சிறந்து



**TAMILNADU POWERLOOM FEDERATION LTD.,**

(Also known as Tamilnadu Small Scale Powerloom Industries Protection Federation)

P.B.No. 80, Apex Colony.
Komarapalayam - 638 183
Namakkal Dist. Tamilndau
Ph: 04288 -264755. Fax:04288 - 265705

1st Floor, Lotus Enclave,
Brough Road, Erode.
Tamilnadu, India 638 001
E-Mail : msmathivan@gmail.com

"Cavalier" M.S Mathivanan
PRESIDENT

செயல்படுவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, தமிழ்நாடு ஜவுளி அமைச்சகத்தில் விசைத்தறித் துறைக்கென தனி வாரியத்தை ஏற்படுத்த வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**<u>ரக ஒதுக்கீட்டுச் சட்டம்:</u>**

மத்திய அரசின் ரக ஒதுக்கீட்டுச் சட்டதின் கீழ் 22 ரகமானது 11 ரகமாக குறைக்கப்பட்டது. இதில் வேஷ்டி, சேலை, துண்டு மற்றும் சர்டிங் போன்ற முக்கிய ரகங்கள் இடம் பெற்றுள்ளன. நாடு முழுவதும் விசைத்தறியில் மக்கள் அனைவரும் அதிகமாக பயன்படுத்தக்கூடிய மேற்கூறிய ரகங்களும் உற்பத்தி செய்யப்பட்டு நமது நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கும் உள்ள மக்கள் அனைவரின் உபயோகத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது. நம் நாட்டு மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அதுவும் குறைந்த விலையில் அதிகமான துணிகளை விசைத்தறியில் மட்டும்தான் நெசவு செய்ய முடியும். ஏனெனில் கைத்தறியினால் அனைவருக்கும் தேவையான ரகங்கள் அவ்வளவு பெரிய அளவில் உற்பத்தி செய்ய முடியாது. அவ்வாறு கைத்தறியினால் உற்பத்தி செய்தாலும் அதன் விலை மிகவும் அதிகமாகவே இருக்கும். தேவைக்கேற்ற துணிகள் கிடைக்காது (Demand and supply) இதனை உணர்ந்த மத்திய மற்றும் மாநில அரசுகள் இந்த சட்டத்தினை முழுமையாக அமல்படுத்துவதை நிறுத்தி வைத்து இருந்தது. ஆனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து ரக ஒதுக்கீடு சட்டத்தினை மறுபடியும் அமல்படுத்துகிறோம் என்று சில அதிகாரிகள் முனைந்து வருகிறார்கள்.

மக்களின் நலனுக்காகவும், உபயோகத்திற்காகவும் குறைந்த விலையில் தயாரிக்கும் விசைத்தறியாளர்களைப் பாராட்டாமல் தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் சில அதிகாரிகள் பல விசைத்தறிக் கூடங்களுக்குச் சென்று அவர்கள் உற்பத்தி செய்வதையும் நிறுத்துமாறு உத்தரவு செய்து வழக்கு பதிவு செய்து வருகிறார்கள். இதனால் பல்லடம், சோமனூர், ஈரோடு, பெருமாநல்லூர், மதுரை போன்ற பகுதிகளில் குறிப்பாக சங்கரன் கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள விசைத்தறியாளர்கள் மிகவும் பயந்த சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

காட் சட்டத்தின்படி உற்பத்தி செய்வதற்கு தடை இல்லை என்று இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட ரகங்களை இறக்குமதி செய்யலாம் என்றும் மத்திய அரசின் சட்டத்திலும் காட் ஒப்பந்தத்திலும் கூறப்படுகிறது.

பங்களாதேஷில் இருந்து நம் நாட்டில் நெய்யபப்டும் குறிப்பாக தமிழ்நாட்டில் நெய்யப்படும் லுங்கி ரகங்களை இறக்குமதி செய்வதற்கு தாராள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷிலிருந்து எந்த சுங்க வரியும் கட்டாமல் லுங்கிகளை இறக்குமதி செய்கிறார்கள். பங்களாதேஷில் இந்த ரகங்களை நெய்து இந்தியாவில் இறக்குமதி செய்யலாம் ஆனால் இந்தியாவிலுள்ள விசைத்தறியாளர்கள்



**TAMILNADU POWERLOOM FEDERATION LTD.,**

(Also known as Tamilnadu Small Scale Powerloom Industries Protection Federation)

P.B.No. 80, Apex Colony,
Komarapalayam - 638 183
Namakkal Dist. Tamilndau
Ph: 04288 -264755. Fax:04288 - 265705

1st Floor, Lotus Enclave,
Brough Road, Erode.
Tamilnadu, India 638 001
E-Mail : msmathivan@gmail.com

"Cavalier" M.S Mathivanan
PRESIDENT

இதனை நெய்யக்கூடாது என்பது எப்படி பொருந்தும்? அதனால் இந்த சட்டத்தினை அமல்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பாக, தமிழ்நாட்டிலேதான் பருத்தியிலே நெசவு செய்யப்பட்ட சேலை, வேட்டி, துண்டு ஆகியவை அதிகமாக தயாரிக்கப்பட்டு நாடு முழுவதும் அனுப்பப்படுகின்றது. இந்த விசைத்தறிக் கூடங்களை நிறுத்துவதன் மூலமாகவும், விசைத்தறியாளர்களை கைது செய்வதினால் உற்பத்தி பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் நூல் தயாரிக்கும் தொழிலாளர்களும் நூற்கப்பட்ட நூலை சாயம் ஏற்றும் தொழிலாளர்களும் மற்றும் சைசிங் மற்றும் வார்பிங் தொழிலாளர்களும் சேர்ந்து அனைத்து தரப்பினரும் பாதிப்படைவார்கள்.

அதே சமயம் இந்த சட்டமானது விசைத்தறித் தொழிலுக்கு மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சட்டமாக இருப்பதினால் இதனை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றோம். இந்த சட்டத்தை அமல்படுத்தக்கூடாது என்று உயர்நீதி மன்றங்களில் வழக்கு தொடுக்கப்பட்டு தடை செய்யப்பட்டது. அனைத்து வழக்குகளும் உச்ச நீதி மன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. உச்சநீதிமன்றம் இதற்காக ஒரு ஆலோசனைக் குழுவினை அமைத்து பாதிக்கப்படும் இந்த தொழிலை பற்றி பரிசீலிக்கப்படும் என்று உத்தரவு இட்டு உள்ளது. ஆனால் மத்திய அரசினால் அவ்வாறு அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவில் விசைத்தறியாளர்களுக்கு எந்த பிரதிநித்துவமும் கொடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கூறிய காரணங்களை பரிசீலித்து, சேலை, வேஸ்டி, துண்டு, சா்டிங், லுங்கி ஆகிய ரகங்களின் உற்பத்தியை விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடாது என்றால் அதை ஈடு செய்வதற்கு கைத்தறியினால் முடியாதது அதுமட்டுமல்லாமல் கைத்தறியில் நெய்தால் அதனுடைய விலை மிகவும் அதிகமாகி தேவைக்கேற்றாற்போல் துணிகள் கிடைக்காது என்பதனை உணர்ந்த மத்திய மாநில அரசுகள் இந்த சட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதை தாமதித்து வந்தது. ஆனால் சில இடங்களில் சில அதிகாரிகள் விசைத்தறிக் கூடங்களுக்குச் சென்று சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று சொல்லி அச்சுறுத்தி வருகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் மக்களின் நலன் கருதி ஏழை விசைத்தறியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த குடும்பங்களும் நலன் கருதி பொதுமக்கள் பெருவாரியாக உபயோகப்படுத்தும் இந்த துணிகளை விசைத்தறியில் நெய்யக்கூடாது என்று பிரிவினையை ஏற்படுத்தும் இந்த சட்டத்தினை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.